2014 *பிப்ரவரி* 18]

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**76—**

**மாணவர் விடுதி**

***24653—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பீர்க்கலைக்காட்டில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பீர்க்கலைக்காட்டுக்கு அருகில் புதுவயல் என்னுமிடத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியும் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகள் இப்பகுதியிலுள்ள மாணவ, மாணவியரின் விடுதித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளன. எனவே, பீர்க்கலைக்காட்டில் புதிதாக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட கிழக்குப் பருவமழை நம் வாசலுக்கு வர மறுக்கின்றது. தென்மேற்குப் பருவமழை நம் திசைகளில் தலைகாட்ட பழகுகின்றது. மனசாட்சியற்ற மத்திய அரசு, புரட்சித் தலைவி அம்மா ஆளுகின்ற பொன்னார் தமிழகத்தின்மீது மண்ணை வாரி தூற்றுகின்றது. சுற்றிலும் துரோகம் தோளுயர்த்தி நிற்கின்றது. வானம் பொழியாதா, வாழ்வு சிறக்காதா என்று தமிழர்கள் தவம் இருக்கின்ற இந்த வேளையில், வரியில்லாத ஒரு நிதிநிலை அறிக்கையைத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

*முற்பகல் 11-25*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஒன்றைப் பதிய விரும்புகிறேன். எல்லோருக்கும் எமன் எருமை வடிவிலே வருவான். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களை எதிர்ப்பவர்களுக்கு எமன் இட்லி வடிவத்திலே வரவிருக்கின்றான் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.*

*அம்மா, ஓங்கி உயர்ந்து நிற்கின்ற இங்கிலாந்தை அன்று மீட்டுத் தந்த சர்ச்சில் அவர்களை 66-வது வயதில்தான் இங்கிலாந்தின் பிரதமராக அந்த மக்கள் தேர்வு செய்தார்கள். அம்மா, சரித்திரம் மீண்டும் திரும்புகிறது. அம்மா, அதே 66-வது வயதில் இந்தியாவின் பிரதமராகத் தேர்வு செய்ய மக்கள் காத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்னைத் தமிழகத்தில் காங்கிரசுக்கு முடிவு கட்டினார் அறிஞர் அண்ணா. அகண்ட பாரதத்தில் காங்கிரசுக்கு முடிவு கட்டுவார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பீர்க்கலைக்காடு கிராமத்தில் அரசினர் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அங்கே 720 மாணவர்கள் படிக்கிறார்கள். அந்தப் பகுதியிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல புதுவயல் பேரூராட்சியில் இருக்கக்கூடிய பிற்பட்டோர் நல விடுதிக்கு மாணவர்கள் வர*

வேண்டுமென்றால், 12 கிலோ மீட்டர் தொலைவு வரவேண்டும். பீர்க்கலைக்காடுக்கு வருகின்ற மாணவர்களே 20 கிலோ மீட்டருக்கு அப்பாலிருந்துதான் அந்தப் பள்ளிக்கு வருகிறார்கள். ஆகவே, அங்கே பிற்பட்டோர் நல விடுதி அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய விடுதிகள் தொடங்குவதற்கான விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியில் படிக்கக்கூடிய 720 மாணவர்கள் 15, 20 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து வருகிறார்கள். சரியான நேரத்தில் வாகனங்களிலோ அல்லது மிதிவண்டிகளிலோ வந்து சேர முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், ஏழை, எளிய மாணவச் செல்வங்களுடைய நலன் கருதி அந்தப் பகுதியிலே ஒரு பிற்பட்டோர் நல விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், என்னுடைய தொகுதிக்குட்பட்ட அனுமந்தக்குடி மேல்நிலைப் பள்ளிக்கும் பிற்பட்டோர் நல விடுதி அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய*

கோரிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**77—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

***4225 திரு. துரை. மணிவேல்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரியலூர் தொகுதி, அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பிலாக் கட்டளை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதி, அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பிலாக் கட்டளை கிராமத்தில் உள்ள துணை ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. விதிகளுக்குட்பட்டு, மக்கள் தொகைக்கேற்ப புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

**திரு. துரை. மணிவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செந்நெல் அடி தொடரும், பொன்னி நதி பாயும், மடை புனலும் புகழ் பாடும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*